1979 மார்ச் 6] [திரு. ஆர். எம். வீரப்பன்]

கின்ற ஒரு உணர்ச்சியை அங்கே வேலைசெய்கிறவர்கள் பெறுவதைப்போல மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதைத் தூண்டிவிடுவதற்குக் காரணமாக இருந்துவிடக்கூடாது என்று தமிழ்நாட்டு மக்களின் சார்பாக நான் கேட்டுக் கொள்கிறேன். அறநிலையத் துறையைச் சேர்ந்த ஒரு அதிகாரிக்கும் வருவாய்த் துறையைச் சேர்ந்த துணைத் தாசில்தாருக்கும் ஏதோ வாக்கு வாதம் ஏற்பட்டிருக்கிறது, அறநிலையத் துறையைச் சேர்ந்தவர்கள், வருவாய்த் துறையைச் சேர்ந்தவர்கள் பூட்டைத் திறக்கின்ற பணிக்கு வரக்கூடாது என்று வேண்டுகோள் விடுத்து, அதைத் தொடர்ந்து கருப்புப் பட்டை அணிந்துகொண்டிருக்கிறார்கள். அது தேவையில்லை என்றும் ஒரு துறையையே புறக்கணிப்பது சரியல்ல என்றும் அரசு தெரிவித்திருக்கிறது. அங்கே குறைகள் இருந்தால், புகார்கள் இருந்தால், தனித் தனியே அவை பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்து, ஊழல் குற்றச் சாட்டு எல்லாம் வரவில்லை, அவர்களுக்குள்ளே இருந்த வாய்ச் சண்டை தீர்க்கப்பட்டு இரண்டாவது முறை உண்டியல் திறக்கப்பட்டு திண்டுக்கல் தாசில்தார், அறநிலையத் துறை அலுவலர்களை வைத்து எண்ணிக்கொண்டிருக்கின்றனர் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் ஹௌதியா கல்லூரி ஆசிரியர்கள் உண்ணா விரதம் இருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் அ. ரகுமான்கான், செ. சிவசாமி, என். வரதராஜன், ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, கு. ரமணி, சி. கோவிந்தராசன், எம். அண்ணாமலை ஆகியோர் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்பைக் கொண்டுவருவார்கள்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உத்தமபாளயத்திலுள்ள ஹாஜி கருத்த ராவுத்தர் ஹௌதியா கல்லூரி ஆசிரியர்கள் தங்களுக்குச்சேர வேண்டிய சம்பளப் பாக்கிகளுக்காகவும் ஏனைய பிற கோரிக்கைகளுக்காகவும், 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7-ம் நாளிலிருந்து தொடர் உண்ணாவிரதம் இருந்துவருவது குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உத்தமபாளையத்திலுள்ள ஹாஜி கருத்த ராவுத்தர் ஹௌதியா கல்லூரியின் ஆசிரியர்கள் 1976–77-ம்

[திரு. செ. அரங்கநாயகம்] [1979 மார்ச் 6

கல்வி ஆண்டில் நிர்வாகம் ஒழுங்காக ஊதியம் தருவதில்லை போன்ற பல்வேறு புகார்களை அரசுக்கு அனுப்பினர். அரசு இதில் தலையிட்டு சில மாதங்களுக்கான ஊதியத்தை நேரிடையாக வழங்கியது. கல்லூரியின் நிர்வாகத்தில் இருந்தவர்கள் கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறை காட்டாததாலும், நிர்வாகத்தில் பிளவு இருந்ததாலும், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் நலனைக் கருதி, வக்ப் வாரியத்தை இக் கல்லூரியை ஏற்று நடத்தும்படி அரசு கேட்டுக்கொண்டது. அவ்வாறே கல்லூரியின் நிர்வாகம் வக்ப் வாரியத்தால் எடுக்கப்பட்டு 1977 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் நாள் முதல் திரு. தர்வீஷ் மொகிதீன் என்பவரைச் செயலராகக் கொண்டு நடந்து வருகிறது. முந்தைய நிர்வாகம் டிசம்பர் 1976 முதல் மே 1977 வரையிலான காலத்திற்கு ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கவில்லை, மான்ய விதிகளின் பழைய முறைப்படி உதவி பெறும் கல்லூரிகளின் நிர்வாகம் சம்பளத்தை முதலில் ஆசிரியர்களுக்கு வழங்கிவிட்டு பிறகு அரசிடமிருந்து பெறுவது நிர்வாகத்தின் கடமையாகும், மேற்காணும் காலத்திற்கு ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க வக்ப் போர்டு தமிழக அரசை ரூ. 2.65 லட்சம் உடனடி மான்யமாக கேட்டது? ஆனால் அக்கல்லூரிக்கு 1975–76 வரை, உரிய தொகைக்கு மேலாக மான்யம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்க வக்ப் போர்ட்டே கல்லூரித் தொகையிலிருந்து வழங்க ஆவன செய்யுமாறு அரசு ஆணையிட்டது. அக்கல்லூரியில் இருந்து 1976–77 மற்றும் 1977–78 ஆகிய ஆண்டுகளுக்கு உரிய நிதி நிலை அறிக்கை இன்னும் கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

கல்லூரி ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாதார் விண்ணப்பங்களின்றும், அவர்களுக்கு மார்ச் 1977 முதல மே 77 வரையில் உரித்தான சம்பள பாக்கி நிர்வாகத்தால் வழங்கப்படவில்லை எனத்தெரியவருகிறது. எனவே, ஊழியர்களுக்கு, 6 மாத சம்பள பாக்கியில் இன்னும் 3 மாத சம்பள பாக்கிதான் வழங்கப்படவேண்டும் என்று தெரிய வருகிறது.

தற்போதைய கல்லூரி நிர்வாகம் தனது 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9-ம் நாளின் கடிதத்தில் முந்திய நிர்வாகத்தின் தவறுதலால்தான் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படவில்லை என்றும், கல்லூரி நிதி நிலை அறிக்கை அனுப்பப்பட்டு, மான்யம் வழங்கப்பட்டால் நிலைமையை ஒருவாறு சமாளிக்கலாம் என்றும் கூறியுள்ளார். எனவே, நிர்வாகத்திடமிருந்து 1976–77 மற்றும் 1977–78 ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை வரப்பெற்றால், தகுதிப்படி, அக்கல்லூரிக்கு மான்யம் அளிக்கப்படும். இதைக் கொண்டு ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க இயலும்.

1979 மார்ச் 6]

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் எழுப்பிய கவன ஈப்புத் தீர்மானத்திற்கு அமைச்சரவர்கள் இங்கே அறிக்கை வாசித்தார்கள். ஆனால் அது வெறும் சம்பளப் பாக்கிப் பிரச்னை மட்டுமல்ல. ஏனைய பிற கோரிக்கைக்களுக்காவும் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டேன். வக்ப் போர்ட் நிர்வாகம் 1977 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் நாளிலிருந்து அந்தக் கல்லூரியை எடுத்துக்கொண்டது. ஆனால் அந்தக் கல்லூரிக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது. நீதி மன்றத் தீர்ப்பு, அந்தக் கல்லூரிக்குப் போய்ச் சேர வேண்டுமென்று இருக்கிறது. வக்ப் போர்டுக்கு வந்திருப்பதன் நோக்கமே அந்த பொசஷனைக் கொடுப்பதற்காகத்தான். வக்ப் போர்ட் அந்த பொசஷனை எடுக்கவில்லை. மாறாக, வக்ப் போர்ட் வந்த பிறகு கல்லூரி நிர்வாகத்தை எடுத்துக்கொண்டு பிறகு கமிட்டி போட்டார்கள். எஸ்டேட் ஆபிசர் என்று போட்டார்கள். அந்த எஸ்டேட் ஆபிசர் யார்? மாண்புமிகு வக்ப் போர்ட் அமைச்சரின் உறவினர் பெரியகுளத்தைச் சேர்ந்தவர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது, சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : ஆனால் இன்றைக்கு இந்தக் கல்லூரியின் சொத்தை எப்படிச் சொந்தமாக்க வேண்டுமோ அதற்காகப் பாடுபட்ட எஸ்டேட் ஆபீசர் நீக்கப்பட்டார். அது எப்படி என்று தெரியாது. நிலத்திற்குரிய பொசஷனைக் கல்லூரிக்குக் கொடுக்க வேண்டிய நேரத்தில் எஸ்டேட் ஆபீசரை ஏன் நீக்கியிருக்கிறீர்கள் என்பதற்கு விளக்கம் கொடுக்க வேண்டும் என்பது ஒன்று, இரண்டாவதுதாக, நிர்வாகம் பல ஊழல்களைச் செய்திருக்கிறது என்று ஆதாரபூர்வமாக அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வக்ப் போர்ட் கமிட்டி அமைத்து ஊழலை நீக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான விளக்கத்தைத் தர வேண்டும். மூன்றாவதாக, இன்னும் அரசுக்கு நிதி நிலை அறிக்கையைக் கல்லூரி அனுப்பி வைக்கவில்லை என்றால் அதற்கான என்ன முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது? ஏன் காலதாமதம்? வக்ப் போர்ட் நிர்வாகம் ஏற்பட்டதற்குப் பிறகும், எந்த நோக்கத்திற்காக வக்ப் போர்ட் எடுத்துக்கொண்டதோ அது நிறைவேறியதா? அந்த வக்ப் போர்ட் இன்னும் மயக்க நிலையில் இருக்கிறதா? நிர்வாகத்தில் வேறு ஏவாவது சம்பந்தம் இருக்கிறதா? அந்த இரும்புத் திரை என்ன? இவைகளை அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, அவர்களுடைய நிதிநிலை அறிக்கையைத் தந்த

தற்குப் பிறகுதான் மானியம் தரவேண்டும். ஆனால் 1975–76 வரை உரிய தொகைக்கு மானியம் வழங்கப் பட்டிருக்கிறது. இப்பொழுது இரும்புத் திரை விலகியிருக்கும் என்று கருது கிறேன். அதுமட்டுமல்லாமல், கல்லூரி நிர்வாகம் சம்பந்த மாகக் கல்வித் துறைக்கு இருக்கின்ற அதிகாரங்களின்படி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அவைகளை நிச்சயமாக நாங்கள் எடுப்போம். வக்ப் போர்டு சம்பந்தமாக, சம்பந்தப் பட்ட அமைச்சரின் கவனத்தை ஈர்க்க முயற்சிக்கலாம்.

திரு. செ. சிவசாமி : மதிப்பிற்குரிய உப தலைவரவர்களே, இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அங்கே ஒழுங்காகச் சம்பளம் கொடுக்கப்படாததன் காரணமாக அந்த உபாத்தியாயர்கள் தொடர்ச்சியாக என்ன செய்வார்கள் என்பதைக் கணக்கி லெடுத்துக்கொண்டு அவர்களுக்கு அரசு நேரடியாகச் சம்பளத் தைக் கொடுத்து, மற்ற விவகாரங்களை நேரடியாக வைத்துக் கொண்டால் நல்லது என்று கருதுகிறேன். அதற்கு அரசு நட வடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, ஆசிரியர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான முயற்சிகளை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. அண்மையில் நடைபெற்ற விவாதத்தில் இதுவெல்லாம் பேசப்பட்டது. நடவடிக்கைகள் தொடரும்.

(முற்பகல் 11–00)

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர் களே, தனியார் கல்லூரிகளிலே ஆசிரியர்களுக்கு முறையாகச் சம்பளம் கொடுக்கவில்லை என்பது இந்தக் கல்லூரி விஷயத்தி லேயிருந்து தெரிய வருகிறது. இந்த நிலையைப் போக்க தனி யார் கல்லூரியிலே வேலை செய்கின்ற ஆசிரியர்களுக்கும் அவர் களுடைய மாதாந்திரச் சம்பளத்தை நேரிடையாகப் பட்டு வாடா செய்து இந்தக் குறையை நீக்க அரசு நடவடிக்கை மேற் கொள்ளுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அது பற்றி ஒரு வாக்குறுதியைத் தந்து அந்த அடிப்படையிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் துணைத் தலைவர வர்களே, இந்த கருத்து ராவுத்தர் கல்லூரி விஷயம் இந்த அரசு அமைந்த பிறகு 1977-லே இருந்து அந்தக் கல்லூரியினுடைய போர்டின் மிஸ்மேனேஜ்மென்ட் சம்பந்தமாகவும் அந்த ஆசிரியர் களுக்கு காலாகாலத்தில் சம்பளம் கொடுக்காதது சம்பந்தமாகவும்

சட்டமன்றத்திலே பேசப்பட்டு வருகிறது. இப்பொழுது அமைச்சரவர்கள் கூறியிருக்கககூடிய பதிலிலிருந்து என்ன தெரிகிறது என்று சொன்னால், அதை வக்ப் போர்ட்டே நேரடியாகக் கண்காணிக்கிறது என்பதாகும். வக்ப் போர்ட் அதை கண் காணிக்கிறது என்றாலும் அந்த காலேஜ் போர்ட்—மாற்றப்பட வில்லை. தொடர்ந்து இந்த நிலை நீடிப்பதால் வக்ப் போர்ட் நிர்வாகத்தின்கீழ் இருந்தாலும் கல்லூரி நேரடியாக கல்வி அமைச்சகத்தைச் சேர்ந்ததால்— காலேஜ் போர்டை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? 1975—76 வரை கணக்கு காட்டிய காரணத்தால் மானியம் கொடுக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். (குறுக்கீடு) 1976—77, 1977—78 ஆண்டிற்குக் கணக்குகள் அனுப்பப்படவேண்டும், அதற்குப் பிறகுதான் மானியம் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், இப்பொழுது அமைச்சர் அவர்கள் கல்லூரி ஆசிரியர்களுக்கு ஒரு வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள்— இனி தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு நேரடியாகச் சம்பளம் பட்டுவாடா செய்யப்படும் என்று. இதை அடிப்படையாகக் கொண்டு, கல்லூரி நிர்வாகம் 1977 லேயிருந்து கணக்கு அனுப்பாவிட்டாலும், அரசு கொடுக்கும் மானியத்தில் கழித்துக் கொள்ளலாம், 1977 லேயிருந்து கொடுக்கவேண்டிய சம்பளத்தை— அரியர்ஸ் பாக்கியை, இந்த மானியத்திலேயிருந்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன். அதே சமயத்தில், காலேஜ் நிர்வாகத்தில் இருக்கக்கூடிய உறுப்பினர்களையும் மாற்றியமைக்கக்கூடிய நடவடிக்கை எடுக்கப்படும்மா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, உறுப்பினர்களை மாற்றியமைப்பது என்பது அரசினுடைய அதிகார வரம்பு என்ன எப்பதை அடிப்படையாகக் கொண்டது. சம்பள பாக்கி ஆசிரியர்களுக்குக் கிடைக்கச் செய்வதற்காக நாம் சில முயற்சிகளை எடுப்போம் என்கிற உறுதியை அந்த ஆசிரியர் பிரதிநிதிகளிடத்திலே சொல்லியிருக்கிறேன். அந்த அடிப்படையில் அந்த ஆசிரியர்களுக்குச் சம்பள பாக்கியைத் தருகின்ற நடவடிக்கை எடுப்போம் என்பதுதான் ஆரம்பத்திலே கொடுத்த அறிக்கையின் இறுதிப் பகுதியிலே வருகிறது. ஆகவே, அந்த முயற்சியிலே அரசு இறங்கி இருக்கிறது.

திரு. எம். அண்ணாமலை: தலைவரவர்களே, ஹாஜி, ராவுத்தர் கல்லூரி ஆசிரியர்கள் ஊதியம் சம்பந்தமாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அதே நேரத்தில், அந்தப் போராட்டத்திற்கு காரணமே அந்த நிர்வாகம் முறையான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லையென்றும் குறிப்பிட்டார்கள். அவற்றையெல்லாம் கவனித்து அந்தக் கல்லூரியை அரசே ஏற்று நடத்த அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். இரண்டாவதாக, சம்பள விஷயத்தைப் பற்றிமட்டும்

பேசினார்கள். அந்த ஆசிரியர்களுடைய பிற கோரிக்கைகள் சம்பந்தமாக என்ன பரிசீலனை செய்யப்பட்டது என்பதையும் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, ஒரு கல்வி நிறுவனத்தை அரசு ஏற்றுக்கொள்வது என்பது பல்வேறு விவகாரங்களை அடிப்படையாகக் கொண்டது. இப்பொழுது நம் முன்னால் உள்ள பிரச்னை ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு, இருக்கிற அதிகார வரம்பிற்குள் இந்த அரசு ஏதேனும் செய்கிறதா என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிய விரும்புகிறார்கள் என்று கருதுகிறேன் அந்த அடிப்படையில் இருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆசிரியர்கள் பாதிக்கப்படாத வகையில் எல்லா நடவடிக்கைகளையும் அரசு எடுத்திருக்கிறது.

(6) அரசினர் தீர்மானம்.

விதி 41(3) ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடைமுறை விதி 41 (3) இன் கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களைக் கவன ஈர்ப்புக்குக் கொண்டு வரக் கூடாது என்ற விதியைத் தளர்த்த வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(5) கவன ஈர்ப்புகள்— தொடர்ச்சி.

(இ) உதகமண்டலம் மேட்டுப்பாளையம் பாதையில் நடைபெறும் நிவாரணப் பணிகள் குறித்து.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி எண். 41 ன் கீழ் கீழ்க்கண்ட பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.